27.09.2023
O.S.No. 212/2018

பி.வா. சா. 4 ஏ.ஜெரால்டு அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் என்.பஞ்சம்பட்டி சவரியார் தெருவில் குடியிருந்து வருகிறேன். சேசுராஜ் எனக்கு பழக்கமானவர். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞருக்குச் சொன்னேன். வழக்கை பன்னீர்செல்வம் தாக்கல் செய்துள்ளார். வாதி பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு விவரம் ஓரளவு எனக்குத் தெரியும். எந்த எந்த சொத்துக்கு எவ்வளவு பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. வாதியின் அப்பா, தாத்தா எந்த சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்களுக்குள் சொத்து சம்மந்தமாக என்ன பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. எந்த சொத்து குறித்து உயில் எழுதி வைத்தார்கள் என்றால் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. எந்த சொத்தை எழுதி வைத்தார்கள் என்ற விவரமும் தெரியாது. 2014 ல் உயில் எழுதி வைத்ததாக கேள்விப்பட்டேன். யார் சொல்லி தெரியும் என்றால் ஊரில் பேசிக்கொண்டார்கள். பொதுவாக சின்ன மகனுக்கு உயில் எழுதி வைத்ததாக பேசிக்கொண்டார்கள். நான்கு உயில் உள்ளபோது எந்த உயிலைப்பற்றி சொன்னார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 03.05.2013 ம் தேதி வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனார் தருமராஜ் வாதிக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. தருமராஜ் மூன்று உயில் எழுதி வைத்த நிலையில் எந்த எந்த உயிலில் யார் யாருக்கு எந்த சொத்தை எழுதி வைத்தார் என்ற விவரமும் தெரியாது. எத்தனை அயிட்டச் சொத்துக்களை உயிலில் எழுதி வைத்தார் என்றும் தெரியாது. உயிலின் அடிப்படையில் யார் யார் எந்த எந்த சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்ற விவரமும் தெரியாது

என்றால் சரிதான். அந்த சொத்துக்களை உயிலின் அடிப்படையில் யார் யார் பந்தகபராதீனம் செய்து அனுபவித்து வந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்திற்கு என்னை சாட்சியம் அளிப்பதற்காக 2 ம் பிரதிவாதி ஜேசுராஜ் அழைத்து வந்தார். அவர் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். எனவே அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.09.27 17:06:02 +0530

Principal District Judge,
Dindigul.